செய்தி வெளியீடு எண்– 306 நாள்–3.4.2010

## செய்தி வெளியீடு

## நலிந்த கலைஞர்களுக்கு மாதம் 1000 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம்! 2009–2010ஆம் ஆண்டில் புதிதாக நிதியுதவி பெற தேர்வு செய்யப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களையும் சேர்த்து இதுவரை மொத்தம் 7 ஆயிரத்து 391 பேர் பயனடைகின்றனர்!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

கலை வளர்ச்சிக்குத் தொண்டு புரிவதையே தமது வாழ்வியல் கடமையாகக் கொண்டு வாழும் கலைஞர்கள், வயது முதுமை காரணமாகத் தொழில் வாய்ப்புகள் குறைந்து அல்லல்படும் சூழ்நிலையைப் போக்கிட நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி மாதம் 500 ரூபாய் என்பதை, 2006க்குப் பின் மாதம் 1000 ரூபாய் என முதலமைச்சர் கலைஞர் உயர்த்தி வழங்கினார். அத்துடன், 2006 முதல் ஆண்டுக்கு 500 பேர் வீதம் கடந்த மூன்றாண்டுகளில் 1500 நலிந்த கலைஞர்களுக்குப் புதிதாக உதவித் தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு, அவர்கள் மாதம் 1000 ரூபாய் வீதம் நிதியுதவி பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள்.

அவர்களைத் தொடர்ந்து 2009–2010ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் மேலும் 500 நலிந்த கலைஞர்களுக்கு, 1.8.2009 முதல் மாதம் 1000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் 24.9.2009 அன்று ஆணை பிறப்பித்திருந்தார். அந்த ஆணையின்படி, நிதியுதவி பெறத் தகுதிவாய்ந்த 500 நலிந்த கலைஞர்களைத் தேர்வு செய்து முதலமைச்சர் கலைஞர் இன்று (3.4.2010) ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் காரணமாக, அரசுக்கு ஆண்டொன்றுக்கு 60 இலட்ச ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

தற்போது புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களையும் சேர்த்து, இத்திட்டத்தின்கீழ், மொத்தம் 7 ஆயிரத்து 391 பேர் பயனடைகின்றனர்.

*****

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.